

# ஜெய் வாசவி!

# வைஸ்யராய் இருந்தால் பகிரவும் (வைஸ்யருக்கு மட்டும்)

**ஜெய் வாசவி !**

நம் வைஸ்ய குல சொந்தங்கள் அனைவருக்கும் பணிவான வணக்கங்கள் !

நம் வைஸ்ய சமுதாயம் இதுவரை எத்தனையோ இடர்பாடுகளை சந்தித்து, அதை சமாளித்து வெற்றி கண்டு ஒரு "பீனிக்ஸ்" பறவையைப் போல வெளிவந்துள்ளது.அது அந்தந்த காலகட்டத்தில் வாழ்ந்து வந்த வைஸ்யர்கள் நன்கு அறிவார்கள்.நமக்கு சவால் வெளியில் இருந்து என்றால், எந்த வழியில் வேண்டுமானால் போராடி வெற்றி பெறலாம். நமக்கு சவால்கள் உள்ளேயே என்றால் உட்கார்ந்து பேசி தான் வெற்றி பெற வேண்டும்.அதற்காகத்தான் இந்த முயற்சி.

நம் வைஸ்ய குலத்திற்கான இன்றைய பெரும் சவால் தாமதமாகும் வைஸ்ய திருமணங்கள் ! தடைப்படும் திருமணங்கள் ! தவிப்பில் வைஸ்ய பெற்றோர்கள், மணமகன்கள், மணமகள்கள்.

| | | |
|---|---|---|
| ஏன் இப்படி ? | என்ன காரணம் ? | யார் காரணம்? |
| என்ன எதிர்பார்ப்புகள்? | என்ன சவால்கள் ? | என்ன தீர்வுகள்? |

இந்த கேள்விகளுக்கெல்லாம் எந்த ஒரு அதிகார மையமோ , தனி நபரோ நாட்டாமையாக இருந்து தீர்ப்பு சொல்ல இயலாது.

முதலில் ஏன் தாமதமாகிறது என்ற உண்மையான காரணங்கள் தெரிய வேண்டும். அதற்கு யார் யார் காரணம் என்பது தெரிய வேண்டும்.எதிர்பார்ப்புகள் என்ன என்று அறிந்து கொள்ள வேண்டும். அதுவும் பலதரப்பட்ட பல்வேறு ஊர்களில் உள்ளவர்களின் மனப் பிரதிபலங்களை அறிய வேண்டும்.

அதற்கான தீர்வுகளை நம் வைஸ்ய மக்களே தர வேண்டும் என்ற ஜனநாயக மாண்பில் தான் நான் இந்த முயற்சியை துவக்கியுள்ளேன்.

எல்லோரும் இருட்டு இருட்டு என்று சொல்வதை விட, யாரவது ஒருவர் மெழுகுவர்த்தியை ஏந்தினால் கூட போதும் என்ற வரிகளின் நம்பிக்கையில் தான் நான் இந்த சிறு மெழுகுவர்த்தியை ஏந்தும் செயலை துவக்குகிறேன். இதை சூரிய வெளிச்சமாக நீங்கள் அனைவரும் சேர்ந்து மாற்றம் செய்து கொண்டுவருவீர்கள் என்ற நம்பிக்கையுடன் உங்கள் கண்ணன்,

**FOUNDER : WORLD ARYA VYSIYA GLITTERS RECORD BOOK**

**WORLD ARYA VYSIYA ACHIEVERS AWARD**

**RAMANATHAPURAM**

# தமிழக வைஸ்யர்களுக்கான தலையாயப் போட்டி !

1. நம்முடைய வைஸ்ய குலத்தில் ஆண் மற்றும் பெண் ஜாதகர்களுக்கு திருமணம் தாமதப்படுகின்றது. அது ஏன்? காரணம் என்ன?
2. மணமகனின் எதிர்பார்ப்புகள் என்ன?
3. மணமகளின் எதிர்பார்ப்புகள் என்ன?
4. மணமகனின் பெற்றோர் எதிர்பார்ப்பது என்ன?
5. மணமகளின் பெற்றோர் எதிர்பார்ப்பது என்ன?
6. திருமணத் தடைகளுக்கான காரணம் என்ன?
7. மணமகளின் / மணமகனின் பெற்றோர்கள் எதிர்பார்ப்புகளில் எது எது சரி? எது எது எதிர்பார்க்க கூடாது?
8. சுயத்தொழில் செய்தால் திருமணம் தாமதமாகுமா?
9. வேலையில் இல்லாத மணமகளுக்கு திருமணம் தாமதமாகுமா?
10. திருமணத்திற்கு தயாராக உள்ள மணமகனின் வசதிகள், வாழ்க்கை, வெளித்தோற்றம் பார்ப்பது சரியா? அல்லது மணமகனின் சுய ஒழுக்கம்/பண்புகள் பார்ப்பது சரியா?
11. மணமகளின் வேலை, சம்பளம், அழகு, நகைகள், சீர் வரிசை பார்ப்பது சரியா? அல்லது குணநலன்களை, குடும்பப்பின்னணியை பார்ப்பது சரியா?
12. திருமண விஷயங்களை சம்பந்திகள் ஆகப்போகின்றவர்கள் நேரடியாக பேசுவது சரியா? இடையில் யாரையாவது வைத்து பேசுவது சரியா?
13. திருமண சம்பந்தப்பட்ட அறிமுக விஷயங்களில், உள்ளதை உள்ளபடி நாம் உண்மையாக பேசுவது சரியா? அல்லது மொட்டை பெருமைக்காக இல்லாததை இருப்பது போல் பேசுவது சரியா?
14. பெட்டிக்கடை வைத்திருப்பதும், சுயத் தொழில் செய்வதும் தற்போது உள்ள பெண் வீட்டாரால் ஏற்றுக்கொள்ளப்படுகிறதா? இல்லையா?
15. திருமணமானவுடன் மணமகனை பெற்றோர் சார்ந்திருப்பது ( பொருளாதார ரீதியாக / மனரீதியாக) மணமகள் வீட்டார் ஏற்றுக்கொள்கிறார்களா? இல்லையா? (ஒரே ஒரு மகன் எனில் அவர் பெற்றோர் எங்கு செல்வார்கள்?)
16. அதே போல் ஒரே ஒரு மகள் உள்ளவர்கள், திருமணத்திற்கு பின்னர் அவர்களின் எதிர்கால நிலைக்கு என்ன வழி?
17. அசைவம்: மொத்தத்தில் நம் வைஸ்ய குலம் இதை ஏற்கின்றதா?

18. நம் வைஸ்ய கலாச்சாரம் மற்றும் பண்பாடு, நம் பிள்ளைகளுக்கு நம்மால் வாழ்ந்து காட்டப்படுகின்றதா? இல்லையா? இல்லையெனில் என்ன செய்ய வேண்டும்? கூட்டுக்குடும்பம் வாழ்க்கை நம் மகள் வாழப் போகும் இடத்தில் இருந்தால் சரியா? இல்லை வேண்டாமா? நம் குல தெய்வம் ஸ்ரீ வாசவி கன்னிகா பரமேஸ்வரி அம்மன் தியாக கதை நம் வீட்டு ஆண் பிள்ளைக்கும், பெண் பிள்ளைக்கும், தெரியுமா? தெரியாதா? தெரியாது எனில் எப்படி தெரியவைக்க வேண்டும்?

19. மணப்பெண்கள் முக்கிய நகரங்களில் மட்டுமே உள்ள மணமகன் வரன்களை பார்க்கின்றார்கள். கிராமப்புரத்தில் இருக்கும் மணமகன்களை தவிர்க்கிறார்களே இது சரியா?

20. தற்போது மணமகனுக்கும் மணமகளுக்கும் உள்ள வயது வித்தியாசம் ஒரு வருட வித்தியாசத்தில் அல்லது அதற்கும் குறைவாக வரன் தேடுகிறார்கள் இது சரியா?

மேற்கண்ட இந்த கேள்விகளுக்கு தங்கள் மனதில் படுகின்ற சரியான பதிலை தனித்தனியாக எழுதி கீழ்கண்ட முகவரிக்கு தபாலிலோ கொரியரிலோ அனுப்பி வைக்கவும். தபால் கிடைத்த விபரத்தை உறுதிசெய்து கொள்ளவும்.

இதற்கான பதிலை நம் வைஸ்ய பெற்றோர்கள், மணமகன், மணமகள், யார் வேண்டுமானாலும் அனுப்பலாம். அதில், தங்கள் பெயர், முழு முகவரி, கோத்திரம், மொபைல் நம்பர், போட்டோ - 1 ; இணைத்து அனுப்பவும்.

| | | |
|---|---|---|
| போட்டி ஆரம்ப நாள் | : | அக்டோபர் 2, 2018 |
| நிறைவு நாள் | : | நவம்பர் 14, 2018 |
| முடிவுகள் அறிவிக்கப்படும் நாள் | : | ஜனவரி 14, 2019 |

பதில்களை அனுப்ப வேண்டிய முகவரி:

எம்.கண்ணன்,
ஸ்ரீ ஜோதி ஜுவெல்லர்ஸ்,
160, ஸ்வாமி விவேகானந்தர் சாலை,
சிகில் ராஜ வீதி,
இராமநாதபுரம் - 623 501.
Mobile: 94432 35170

- தனி நபராகவோ அல்லது மகளிர் சங்கங்கள், மகிளாவிபாக், லேடீஸ் கிளப் சங்கங்கள், மகாசபை ஆகியோர் கூட்டாக கூட சேர்ந்து தங்களின் கருத்தை ஒன்றாக்கி ஒருமித்து அந்த அமைப்பின் தலைமையின் பெயரில் அனுப்பலாம்.
- இந்த மேற்கண்ட கேள்விகளுக்கு பதில் தான் அனுப்ப வேண்டும், பதிலாக இன்னொரு கேள்வியை கேட்க கூடாது.
- பெரும்பான்மையினரின் பதில்கள் ஆராயப்பட்டு சிறந்த தீர்வை சொல்லும் நபர் அல்லது அந்த அமைப்பு 2018 – 2019 ஆம் ஆண்டின் **WORLD ARYA VYSIYA GLITTERS RECORD BOOK** ல் இடம் பெறச்செய்து வைஸ்ய சமூக சாதனையாளர் விருது வழங்கப்படும்.
- சரியான பதிலை சொல்வது ஒரு அமைப்பாக இருந்தால் ஒரு குழுவாக **WORLD ARYS VYSIYA GLITTERS RECORD BOOK** ல் இடம் பெறலாம்.
- ஆனால் பதில் அளிக்கும் பதில் படிவதிலேயே யார் யார் இனைந்து இந்த பதிலை அனுப்பி உள்ளார்கள் என்பதை தெளிவாக குறிப்பிட்டு கையொப்பமிட்டவர்களின் பெயர்கள் மட்டுமே புத்தகத்தில் இடம்பெறும். விடுபட்டுப்போய் விட்டது என்று பின்னர் யாரையும் சேர்க்க இயலாது.
- குழுவிலேயே இடம்பெற்றுவிட்டால் தனி நபராக போட்டியில் பங்கேற்க இயலாது.
- விதிமுறைகளில் சூழ்நிலைக்கு தக்கவாறு மாறுதல் செய்ய போட்டி நடத்துவோர்க்கு உரிமை உண்டு.

மொத்தத்தில் நம் சமுதாயத்தில் உள்ள மணமக்களுக்கு திருமண நிகழ்வு தாமதப்படுகிறது. என்ன தான் தீர்வு என்பதே இந்த கருத்தாய்வு போட்டிக்கான காரணம். எனவே போட்டியில் கலந்து கொள்பவர்கள் இந்த விஷயத்திற்காக தீர்வுகளை மட்டும் பதிலாக தரவும் ஏனென்றால் தாங்கள் சொல்கின்ற பதில் தீர்வு உண்மையிலேயே சரியாக இருந்து பெரும்பான்மையாளர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டால் நீங்கள் இந்த வைஸ்ய சமுதாயத்திற்கு ஒரு மிகப்பெரிய ஈடு இணையில்லாத தொண்டினை செய்துள்ளதாக அர்த்தமாகும்.

இது சமுதாயத்தை முன்னெடுத்து செல்வதற்காகவும், நமது சவாலுக்கு நாமே பேசி தீர்வு காணவும், எந்தெந்த விஷயங்கள் நம் பிள்ளைகளின் திருமண நிகழ்வுக்கு தடையாக உள்ளது என்பதை நாம் அனைவரும் அறிந்து கொள்ளவும், நம் வைசிய மக்களை பாதிக்கும் ஓர் பிரச்சனையின் நாடித்துடிப்பை அறிந்து கொள்ளவும்,

அதற்கான சரியான அணுகுமுறைகளை நாமே மாற்றி உருவாக்கிடவும் உதவிடும் ஓர் செயலே ஆகும்.

இது என் தனிப்பட்ட முயற்சி : நம் குல தெய்வம் வாசவி கன்னிகா பரமேஸ்வரி அம்மா அருளோடு, வைஸ்ய சமூக சாதனையாளர் விருது பெற்று **WORLD ARYA VYSIYA GLITTERS RECORD BOOK** ல் இடம் பெற வாழ்த்துகிறேன்.

அழைக்கின்றேன்,

அன்பு வைஸ்ய நெஞ்சங்களையும் !

சமுதாய பெரியோர்களையும் !

சமுதாய நலன் விரும்பிகளையும் !

**நன்றி !!**

**எம்.கண்ணன், இராமநாதபுரம்**